
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1284

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

73

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# உழைக்கும் மக்களின் ஒற்றுமை கோரிய ‘மண்ணின் மைந்தன்!’

படங்கள் உதவி : ஞானம்



**2005**-ஆம் ஆண்டு, கலைஞர் திரைக்கதை வசனத்துடன் ஒரு பாடலும் எழுதி வெளியான படம், ‘மண்ணின் மைந்தன்’. “நான் என்று சொன்னால் உதடுகள் ஒட்டாது; நாம் என்றால் மட்டும்தான் உதடுகள் ஒட்டும்” என்ற அவரது புகழ் பெற்ற வாசகத்தை மெய்ப்பிக்கும் வகையில் வெளியான படம்தான் ‘மண்ணின் மைந்தன்’.

தேனாண்டாள் பிலிம்ஸ் சார்பில், இராம.நாராயணன் தயாரித்து இயக்கிய இந்தத் திரைப்படத்தில், சத்யராஜ், சிபிராஜ், வடிவேலு, சுஹா (அறிமுகம்), பொன்னம்பலம், மனோஜ்.கே.ஜெயன், குமரிமுத்து, தியாகு, அலெக்ஸ், பாலாசிங் உள்ளிட்ட பலரும் நடித்துள்ளனர்.

வழக்கம் போலவே, இத்திரைப்படத்தின் தொடக்கத்திலும் கலைஞர் திரையில் தோன்றி, திரைப்படத்தின் கரு குறித்த ஒரு சுருக்கமான அறிமுகத்தை வழங்கியுள்ளார்.

“பேரன்பு கொண்ட பெரியோர்களே, பெற்ற தாய்மார்களே, என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே. மனித சமுதாயத்தில் மதங்களுக்கிடையே, சாதிகளுக்கிடையே, பணம் படைத்தவர்களுக்கிடையே வேற்றுமை வளர்வதால், விரோதம் தழைப்பதால், வீணாகச் சிந்துவது சாதாரண மக்களின் செந்நீர்தான். அந்தச் செந்நீர் நிறுத்தப்பட, கண்ணீர் சிந்தி, கைகூப்பித் தொழுது, இந்தக் கதை வாயிலாக வெளியிடப்படும் கருத்துகளைக் காணிக்கையாக்குகிறேன். ஒற்றுமை உணர்வே இந்தத் திரைப்படம் நமக்கு வழங்கும் பாடம், பகுத்தறிவு, பண்பாடு, பயனுள்ள அரசியல், சமுதாயப் பொருளாதார தத்துவம்” என்று விளக்குவார்.

### படத்தின் கதை

மேட்டுக்குடி என்ற ஊரில், ஈஸ்வரமூர்த்தி (மனோஜ் கே.ஜெயன்), கஜபதி (பொன்னம்பலம்) என்ற இரண்டு பெரிய மேல்சாதிப் பணக்காரர்கள் மோதிக்கொள்கிறார்கள், ஒவ்வொரு விஷயத்திலும் போட்டி போடுகிறார்கள். அவர்கள் இருவரும் அடியாட்களைத் திரட்டி வைத்திருக்கிறார்கள்.

அடியாட்கள் தங்களது எஜமானுக்காக ஒருவரை ஒருவர் வெட்டிக் கொலை செய்கிறார்கள். கை, கால்களை இழக்கிறார்கள். அப்படித்தான் ஈஸ்வரமூர்த்திக்காக காசி (அலெக்ஸ்) தன் காலையே இழக்கிறார். காசி தெம்பாக இருந்த போது கொண்டாடிய ஈஸ்வரமூர்த்தி, காசி தனது காலை இழந்தவுடன் ஈஸ்வரமூர்த்தி ‘போடா நாயே’ என்று காசியை விரட்டியடிக்கிறார்.



காசிக்கு நிகரான அடியாளாக ஜோசப் (பாலாசிங்) கஜபதியிடம் இருக்கிறார். இவர்களைக் கொண்டுதான் ஈஸ்வரமூர்த்தியும், கஜபதியும் மாற்றி மாற்றித் தாக்கிக்கொள்கின்றனர்.



ஒரு தாக்குதலில், ஈஸ்வரமூர்த்தியின் மனைவி மீனாட்சியும், கார் டிரைவர் குருசாமி மற்றும் அவனது மனைவி காமாட்சி ஆகிய மூவரும் காரில் குண்டு வெடித்து இறந்துபோகின்றனர். அந்த கார் குண்டு வெடிப்பில் இருந்து (சிறுவர்களான) ஈஸ்வரமூர்த்தியின் மகள் அமுதாவும் (சுஹா), கார் டிரைவர் குருசாமியின் மகன் கதிரவனும் (சிபி) தப்புகின்றனர்.

தாய், தந்தையை இழந்த சிறுவன் கதிரவனை, ஈஸ்வரமூர்த்தி கொலைவெறியூட்டி வளர்க்கிறான். ஈஸ்வரமூர்த்திக்காக எதையும் செய்யும் ஓர் அடியாளாக கதிரவன் வளர்கிறான். அத்துடன், அமுதாவும் கதிரவனும் ஒருவருக்கொருவர் அன்புடனும் வளர்கின்றனர்.

வாலிபப் பருவத்தை அடைந்தவுடன் இருவருக்கும் இடையிலான அன்பு காதலாக மாறுகிறது. இந்தக் காதலைத் தனது மச்சான் வாட்டர் வடிவேலு (வடிவேலு) மூலம் அறியும் ஈஸ்வரமூர்த்தி தனது சாதிக்கும், பணக்கார அந்தஸ்துக்கும் விரோதமாகத் தன் மகளை விரும்பும் கதிரவனை அடித்து, வீட்டை விட்டுத் துரத்துகிறான்.

தனது நண்பன் தீனா (சுமன் ஷெட்டி) உதவியுடன் தன்னுடைய காதலி அமுதாவை அழைத்துக்கொண்டு கதிரவன் ஊரை விட்டுத் தப்பித்துப் போகிறான். ஆனால், வழியில் கஜபதியின் அடியாள் ஜோசப், (பாலாசிங்) தீனாவை வெட்டிக் கொலை செய்கிறான். அதைக் காணும் கதிரவன், ஜோசப்பைத் தாக்குகிறான். ஆனால், ஜோசப்பின் சின்னஞ்சிறு மகள் மற்றும் மனைவி மேரி ஆகியோர் அநாதையாகிவிடக் கூடாது என்று கருதி, மன்னித்து உயிரோடு விடுகிறான்.

அப்போது அங்கு வரும் ஈஸ்வரமூர்த்தியின் அடியாட்கள், கதிரவனை அடித்துப் போட்டுவிட்டு, அமுதாவை வீட்டுக்குத் தூக்கி வந்துவிடுகின்றனர். கதிரவனை அமுதாவின் தோழி பாத்திமா காப்பாற்றுகிறாள். இப்போது, கஜபதியும் ஈஸ்வரமூர்த்தியும் சம்பந்தியாக முடிவுசெய்து, கஜபதியின் மகனுக்கு ஈஸ்வரமூர்த்தியின் மகள் அமுதாவைத் திருமணம் செய்வதாகப் பேசி முடிக்கின்றனர்.

இதற்கிடையே, தன் மனைவி மேரி (நடிகை இந்து) மற்றும் குழந்தையின் விருப்பத்தை முன்னிட்டு, மனம் திருந்தி அடியாள் வேலையை உதறிவிட்டு, ஜோசப் குடும்பத்தோடு வெளியூர் செல்லப் புறப்படுகிறான். இதனை அறியும் கஜபதி அங்கு வந்து, மேரியின் கண்முன்னே ஜோசப்பைக் கொலை செய்கிறான்.

தன் தந்தை தனக்கு விருப்பமில்லாத திருமணத்தை நடத்தப்போவதாக அமுதா போலீஸ் இன்ஸ்பெக்டர் பிரதாப்பிடம் (சத்யராஜ்) புகார் அளிக்கிறாள். இதனால், அமுதாவை மீட்டு கதிரவனிடம் பிரதாப் ஒப்படைக்கிறார். அமுதாவையும் கதிரவனையும் கொலை செய்ய ஈஸ்வரமூர்த்தியும், கஜபதியும் ஒன்றுசேர்ந்து, தங்களது அடியாட்களுடன் வருகின்றனர்.

தன்னைத் தாக்க வரும் அடியாட்களிடம் கதிரவன் கேள்வி எழுப்புகிறான். யாருக்காக நாம் ஒருவரையொருவர் வெட்டிக்கொண்டோமோ அவர்கள், தங்களது சாதி, பணம் அந்தஸ்தைக் காப்பதற்காக ஒன்றுசேர்ந்துவிட்டனர். எளிய சாதி ஏழைகளான நாம் ஏன் அடித்துக்கொண்டு உயிரை விட வேண்டும் என்று கதிரவன் கேள்வி கேட்கிறான். இக்கேள்வியால் விழிப்படையும் அடியாட்கள், கதிரவனின் பின் போய் நின்றுவிடுகின்றனர்.

இப்போது ஈஸ்வரமூர்த்தியும் கஜபதியும் தனியாக நிற்கின்றனர். இனி, உங்களது பகையை நீங்களே தீர்த்துக்கொள்ளுங்கள், ‘நாங்கள் உங்களுக்காகச் சண்டையிட மாட்டோம்’ என்று கதிரவன் சொல்கிறான். ஆனால் கஜபதி, ஈஸ்வரமூர்த்தி இருவரும் சேர்ந்து கதிரவனை நோக்கி வெட்ட வருகின்றனர். கதிரவன் விலகிவிடுகிறான். இறுதியில் தாங்களே ஒருவரையொருவர் வெட்டிக்கொண்டு இருவரும் சாகின்றனர்.

அப்போது இன்ஸ்பெக்டர் பிரதாப் அங்கு வந்து, “இங்கே அமைதிக்காகப் பெரிய வேள்வியே நடந்திருக்கு. என்ன விசேஷம்னா இந்த வேள்வியை நடத்துனதே பலியாடுகள் தான். அதை விட என்ன பெரிய விசேஷம்னா, இந்த வேள்வியில பலியானது, இத்தனை நாளா அந்த ஆடுகளைப் பலி கொடுத்துக்கிட்டு இருந்த அந்த மிருகங்கள்தான். இதுவரைக்கும் மத்தவங்களுக்காக ஒருத்தரை ஒருத்தர் வெட்டிக்கிட்டு நீங்க செத்துக்கிட்டு இருந்தீங்க, இனிமே, உங்களுக்காக நீங்க வாழணும். இந்த மண்ணின் மைந்தர்களாக இருக்கணும். வாழ்த்துகள்” என்று சொல்லிச் செல்கிறார்.

மக்கள் அனைவரும் ஆயுதங்களைக் குழி வெட்டிப் புதைக்கிறார்கள். கலைஞர் எழுதிய டைட்டில் பாடல் மீண்டும் ஒலிப்பதுடன் படம் நிறைவடைகிறது.

> **வேள்வியை நடத்துனதே பலியாடுகள்தான். அதை விட என்ன பெரிய விசேஷம்னா, இந்த வேள்வியில பலியானது, இத்தனை நாளா அந்த ஆடுகளைப் பலி கொடுத்துக்கிட்டு இருந்த அந்த மிருகங்கள்தான்.**

...காட்சி விரியும்

## ஆந்திராவுக்குத் தாரைவார்க்கப்படும் முதலீடுகள்!

ஆந்திர மாநிலத்தில், நவம்பர் மாதம் நடைபெற உள்ள உலக முதலீட்டாளர் மாநாட்டையொட்டி, அம்மாநில அரசு தமிழ்நாட்டில் இருந்து முதலீட்டாளர்களை இழுக்கும் வகையில், கோவையில் நிகழ்ச்சியினை நடத்தத் திட்டமிட்டுள்ளது. ஆகஸ்ட் 12-ஆம் தேதி, கோவையில் ஆந்திர அரசின் ‘உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாட்டு விளம்பரப் பயணம்’ என்கிற பெயரில் நடைபெறும் இந்த நிகழ்ச்சி, தமிழ்நாட்டின் சிறு, குறு தொழில் துறையைப் பாதிக்கும் எனத் தொழில்முனைவோர் அச்சம் தெரிவித்துள்ளனர்.

த.வெ.க. ஆட்சிக்கு வந்த பின்னர், தமிழ்நாட்டில் முதலீடு செய்யத் திட்டமிட்ட பல நிறுவனங்கள், ஆந்திராவுக்குச் செல்கின்றன எனக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், ஆந்திராவுக்கு முதலீட்டாளர்களை அழைக்கும் நிகழ்ச்சியைத் தமிழ்நாட்டிலேயே நடத்த அனுமதி அளித்துள்ளது, த.வெ.க. அரசு. தமிழ்நாட்டுக்குப் புதிய முதலீடுகளைத் திரட்டுவதற்குத் திறனில்லாத த.வெ.க. அரசு, தமிழ்நாட்டில் மேற்கொள்ள வேண்டிய முதலீடுகளை ஆந்திராவுக்குத் தாரைவார்க்க உள்ளது. இதன்மூலம் சிறு, குறு, நடுத்தரத் தொழில் மூலதனமும், இலட்சக் கணக்கான வேலைவாய்ப்புகளும், ஜி.எஸ்.டி. வரி வருவாயும் ஆந்திராவிற்குச் செல்லும் பேராபத்து ஏற்பட்டுள்ளது.

அண்டை மாநில அரசே, நேரடியாக தமிழ்நாட்டுக்குள் வந்து தொழில் முதலீட்டாளர்ளைத் திரட்டும் நிலை உள்ளதெனில், தமிழ்நாடு அரசின் மெத்தனம் வெட்டவெளிச்சமாகியுள்ளது. 15 இலட்சம் கோடி டாலர் பொருளாதார வளர்ச்சி இலக்கு வைத்துள்ளோம் எனக் கூறிக்கொண்டே, ஆந்திராவுக்கு கதவைத் திறந்துவிட்டுள்ளது. முந்தைய கழக அரசின் இலக்கும் செயல்பாடுகளும் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியை, இரட்டை இலக்கத்துக்குக் கொண்டு வந்ததுடன், முதலீடுகளைத் திரட்டுவதில் முதன்மை மாநிலமாகவும் கொண்டுவந்திருந்தது. ஆனால் த.வெ.க. அரசு, ரீல்ஸ் மூலம் முதலீடுகளைத் திரட்டலாம் என மக்களை ஏமாற்றுவதுடன், முதலீட்டாளர்களை ஆந்திராவுக்குத் தாரைவார்க்கத் தொடங்கியுள்ளது, மர்மமாக உள்ளது.

## ஃப்ளாஷ்பேக்





எழில்மாறன்

### பெரியாரின் இறுதி நாட்களில்...

தந்தை பெரியாரின் இறுதிக் காலத்தில், அவரது உதவியாளராக இரண்டு ஆண்டுகள் உடனிருந்து அவரை கவனித்துக் கொண்டேன். பல்வேறு பொதுக்கூட்டங்கள், பிரச்சாரக் கூட்டங்களுக்கு, அவரது உதவியாளராகத் தமிழ்நாட்டின் பல இடங்களுக்கும் சென்றுள்ளேன். பிற்பாடு பெரியாரியல் கருத்துகளுடன் இடதுசாரி அரசியலையும் ஏற்றுப் பயணித்துக் கொண்டிருக்கிறேன். தந்தை பெரியாருடன் இருந்த நாட்கள், பலருக்கும் கிடைத்திடாத நல்வாய்ப்பு. காலங்களைக் கடந்தும் சிந்தித்த அவரது ஆற்றலைக் கண்டு பலமுறை வியந்திருக்கிறேன். அவருக்காக, அவருடனேயே பணியாற்றியது, என்றென்றும் என் மனதில் நீங்காமல் இடம்பெற்றுள்ளது.

**- எழில்மாறன், மக்கள் கலை இலக்கியக் கழகம், சென்னை மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### நம்பிக்கையுடன் பணியாற்றுங்கள்!

1962-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது, கழகம் 50 இடங்களில் வெற்றிபெற்று, காஞ்சியில் பேரறிஞர் அண்ணா தோல்வியடைந்தார். அதைக் கண்டு கழகத்தினர் சோர்வடைந்துவிடக் கூடாது என அண்ணா, வரலாற்றுச் சிறப்புமிக்க உரை மூலம் அவர்களுக்குப் புதிய உற்சாகத்தை ஊட்டினார். “என் தோல்விதான் அவர்களுக்கு இன்னும் சில காலத்துக்கு ஆதிக்கம் செலுத்தும் வாய்ப்பு அளிக்கும் என்று கணக்குப் போட்டுக்கொண்டுள்ளனர். அதிலே, அவர்கள் பெருமைப்படலாம். புதிய நம்பிக்கைகூட ஏற்படக்கூடும். ஆனால், அவர்களின் கணக்குத் தவறு, நான் சட்டசபையிலிருந்துகொண்டு பணியாற்றுவதைத் தடுக்க மட்டுமே, இந்தத் தோல்வி பயன்படும். எனவேதான் வேண்டிக்கொள்கிறேன். நேரிட்டுவிட்ட தோல்விகளை மறந்துவிடுங்கள்! கண்கலங்கி நிற்காதீர்கள்” என்று ஊக்க மூட்டியது அவரது உரை.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900